**MARTHANDAM DIOCESAN BULLETIN**
For Private Circulation Only




Printed Matter

To

BOOK POST

If Undeliveried please return to ...
**Bishop's House, Diocese of Marthandam, Marthandam P.O., K.K Dt.- 629 165**

**Santhom Press, Diocese of Marthandam** Mob : +91 94-42-469852

# Bulletin
## Diocese of Marthandam
மார்த்தாண்டம் மறைமாவட்ட மலர்




மலர் 23 ஜூன் 2026 இதழ் 06

## Bishop's Diary

| Date | Day | Time | Programme | Place |
| --- | --- | --- | --- | --- |
| 01.06.2026<br>26.06.2026 | Monday<br>Friday | | | Europe |
| 29.06.2026 | Monday | 6.30 am<br><br>4.00 pm | Diocesan Day<br>Feast Mass<br>Inauguration / Blessing<br>of Malankarai<br>Kalai Koodam | <br>Cathedral<br><br>Mariagiri |
| 30.06.2026 | Tuesday | | Class - St. Mary's<br>Malankara Seminary | Nalanchira |







# மார்த்தாண்டம் மறைமாவட்ட மலர்
# Marthandam Diocesan Bulletin

மலர். 23 ஜூன் 2026 இதழ். 06

***Patron***
*His Excellency*
*Most Rev. Vincent Mar Paulos*

***Editor***
*Rev. Fr. Franklin Jose*
*The Chancellor*

***Design***
*Mrs. Uni Kumari B.*

***Printing***
*Santhom Press,*
*Marthandam*

***Published By***
*The Chancellor*
*Diocese of Marthandam*




மலர். 23 மே 2026 இதழ். 05

**Address :**
Bishop's House,
Diocese of Marthandam,
Marthandam P.O.,
K.K Dist. - 629 165
E-mail:mardiobulletin@gmail.com



The Malankara Syrian Catholic Church
Bulletin of the
Diocese of Marthandam




மலர்.23 ஜீன் 2026 இதழ்.06

**முக்கியமான நாட்கள்**

ஜூன் 2026

- 01 உலக பெற்றோர் தினம்
- 05 உலக சுற்றுச்சூழல் தினம்
- 08 உலகப் பெருங்கடல் தினம்
- 12 குழந்தைத் தொழிலாளர் எதிர்ப்பு தினம்
- 14 உலக இரத்த தான தினம்
- 20 உலக அகதிகள் தினம்
- 21 தந்தையர் தினம்

## உள்ளடக்கம்

| | | |
|---|---|---|
| 1. | Circular | 03 |
| 2. | குருமடச் செய்திகள் | 13 |
| 3. | தாய்மார் சங்கம் | 14 |
| 4. | மேய்ப்புப்பணி அறிவுரைக்குழு கூடுகை | 15 |
| 5. | மறைபரப்பு தளச் செய்திகள் | 16 |
| 6. | புனித அன்னை தெரசாள் ஆலயம் அர்ச்சிப்பு, திருச்சி | 17 |
| 7. | தாபோர் தியான இல்லம் | 17 |
| 8. | மேரி மக்கள் துறவற சபை | 18 |
| 9. | MIDS | 20 |
| 10. | MCA | 22 |
| 11. | பெயர்விழா நல்வாழ்த்துகள் | 24 |
| 12. | MCYM | 25 |
| 13. | திருமண ஆயத்தப்பயிற்சி | 25 |
| 14. | இளையோர் முகாம் | 26 |
| 15. | மறைவட்ட செய்திகள் | 27 |
| 16. | ஆயரின் மே மாத நிகழ்வுகள் | 28 |
| 17. | இம்மாதம் நினைவு கூர | 31 |
| 18. | Bishop's Diary | 32 |

Printed by
Santhom Press, Diocese of Marthandam. Mob : +91 94-42-469852



மலங்கரை சுறியானி கத்தோலிக்கத் திருச்சபை

# இறையழைத்தல் தினம் - 2026

## இறையழைத்தலுக்கான ஆயர் மாமன்ற பணிக்குழு தலைவர் விடுக்கும் சுற்றுமடல்

*மேதகு ஆயர்களே, மதிப்புக்குரிய கோர் எப்பிஸ்கோப்பாமார்களே, மதிப்புக்குரிய ரம்பான்மார்களே, அருட்தந்தையர்களே, திருத்தொண்டர்களே, துறவறத்தார்களே, அன்பான இறைமக்களே!*

மலங்கரை சுறியானி கத்தோலிக்கத் திருச்சபை மே மாதம் 31-ம் தேதி இறையழைத்தல் தினமாகக் கொண்டாடுகிறது. இந்த ஆண்டின் இறையழைத்தல் தினம் திருவழிபாட்டு ஆண்டின் மாபெரும் திருவிழாவான பெந்தெகோஸ்து பெருவிழாவிற்குப் பின் வருகிறது. திருச்சபை மற்றும் உலகின் எதிர்காலத்திற்காக நாம் ஒன்றுகூடி இறைவேண்டலுடன் வளப்படுத்த வேண்டிய தருணமாக இது அமைகின்றது.

இவ்வுலகில் பிறக்கும் ஒவ்வொரு மனிதனும் கடவுளால் ஒரு குறிப்பிட்ட நோக்கத்தோடு படைக்கப்படுகிறான். "தாய் வயிற்றில் உன்னை நான் உருவாக்கு முன்பே அறிந்திருந்தேன்; நீ பிறக்குமுன்பே உன்னைத் திருநிலைப்படுத்தினேன்" (எரே 1:5) என்ற வார்த்தைகள், ஒவ்வொருவரின் வாழ்விற்கும் பின்னால் உள்ள தெய்வீகத் திட்டத்தையும் நோக்கத்தையும் நமக்கு நினைவூட்டுகின்றன. இந்தக் குறிப்பிட்ட நோக்கத்தை உணர்ந்து அதை நிறைவேற்றுவதே ஒருவரின் 'பணி' அல்லது அழைப்பு ஆகும்.

இந்த ஆண்டின் இறையழைத்தல் தினத்தில், நமது வாழ்வின் நோக்கத்தை குறித்தும், வரவிருக்கும் தலைமுறையின் எதிர்காலம் குறித்தும் நாம் ஆழ்ந்து சிந்திக்கக் கடமைப்பட்டுள்ளோம்.

## 1. இதயத்தில் விதைக்கப்பட்ட தெய்வீக விதை

இறையழைத்தல் என்பது, மனிதனின் இதயத்தில் கடவுளால் விதைக்கப்பட்ட ஒரு மென்மையான விதை. அது அடையாளம் காணப்பட்டு, பாதுகாக்கப்பட்டு, பேணி வளர்க்கப்பட வேண்டும். இன்றைய நம் உலகம் புற ஆடம்பரங்களாலும் விளம்பரங்களாலும் கட்டுப்படுத்தப்படுகிறது. என்ன அணிவது, என்ன சாப்பிடுவது, எந்தப் பாதையைத் தேர்ந்தெடுப்பது நாம் என்ன செய்ய வேண்டும் என்பதில் ஊடகங்களும் உலகு சார்ந்த தாக்கங்களும் நம்மைப் பெரிதும் தாக்குகின்றன. இத்தகைய சூழ்நிலையில்தான், புனித கார்லோ அக்குதிசின் புகழ்பெற்ற வார்த்தைகள் இங்கு குறிப்பிடத்தக்கது. "அனைவரும் தனித்துவமானவர்களாகப் பிறக்கிறார்கள், ஆனால் பலர் நகல்களாக இறக்கிறார்கள்". உலகின் இரைச்சலுக்கு மத்தியில், கடவுள் நம்முடைய இதயங்களில் பதித்திருக்கும் தனித்துவத்தை நாம் அடையாளம் காணத் தவறுகிறோம்.

## 2. கடவுளிடமிருந்து வரும் பல்வேறு அழைப்புகள்

கிறிஸ்தவ வாழ்வில் இறையழைத்தல் முதன்மையாக மூன்று பகுதிகளாக உள்ளன.

**குடும்ப வாழ்க்கை:** இவ்வுலகில் புதிய உயிர்களை கொண்டு வந்து, அன்பின் பள்ளிக்கூடங்களாக மாறுவதற்கான கடவுளின் உன்னதமான அழைப்பு.



**துறவறம் :** உலகியல் இன்பங்களை துறந்து, இறையாட்சிக்கு முழுமையாகத் தன்னை அர்ப்பணிக்கும் வாழ்வு.

**குருத்துவம் :** கிறிஸ்துவின் பிரதிநிதியாக பலிகளைச் செலுத்தவும், இறைமக்களை வழிநடத்தவும் அழைக்கப்படும் அழைப்பு.

இவை வெறும் பிரிவுகள் அல்ல, மாறாக ஒவ்வொருவரும் தமது அழைப்பு மற்றும் பணியின் மூலம் இறைவனின் மகிமையை வெளிப்படுத்த வேண்டிய பாதைகளாக அமைகின்றன. நாம் ஒரு மருத்துவராக, விவசாயியாக, ஆசிரியராக, பொறியாளராக வாழும்போது, படைப்பாளரின் திட்டத்தின் ஒரு பகுதியாக மாறுகிறோம்.

## 3. வழிகாட்டிகள்

ஒரு குழந்தை தனது தனித்துவமான திறமைகளையும் அழைப்பையும் உணர்ந்துகொள்ள உதவுவதில் பெற்றோர்கள், ஆசிரியர்கள், குருக்கள் மற்றும் துறவிகளுக்குப் பெரும் பங்கு உண்டு. அவர்கள் தங்கள் பிள்ளைகள் உலகியல் வெற்றியை மட்டுமே அடைய வேண்டும் என்று எதிர்பார்ப்பதற்குப் பதிலாக, கடவுள் அவர்களுக்காக வைத்திருக்கும் கனவை நனவாக்க ஊக்குவிக்க வேண்டும்.

இரண்டாம் வத்திக்கான் திருச்சங்கம் கூறுவது போல, 'யாரை அழைக்கிறார் என்பதையும், திருச்சபையில் எந்தப் பணிக்கு

அவர்களை நியமிக்கிறார் என்பதையும் ஆண்டவராகிய இயேசுவே தீர்மானிக்கிறார். ஆனால், இந்த அழைப்பை அடையாளம் கண்டு பேணி வளர்ப்பதற்கு விசுவாசிகளின் சமூகமே பொறுப்புடையது' (Presbyterorum Ordinis).

**4. இயேசுவின் சீடத்துவம் : நமது அடிப்படை அடையாளம்**

நமது அழைப்பு அல்லது வாழ்க்கைச் சூழ்நிலைகள் எதுவாக இருந்தாலும், நாம் அனைவரும் எல்லாவற்றிற்கும் மேலாக, இயேசுவின் சீடர்கள். இந்தச் சீடத்துவமே நம் ஒவ்வொருவரின் அடிப்படை அடையாளமாகும். புனித மத்தேயு நற்செய்தியில் நாம் இவ்வாறு காண்கிறோம் "நீங்கள் உலகிற்கு ஒளியாய் இருக்கிறீர்கள்.... உங்கள் ஒளி மனிதர்முன் ஒளிர்க" (மத் 5:14-16). நமது அழைப்பு எதுவாக இருந்தாலும், அது உலகிற்கு ஒளியாக இருப்பதும், கடவுளுக்கு மகிமையைக் கொடுப்பதுமாக இருக்க வேண்டும். இத்தருணத்தில் ஆயர் என்ற நிலையில் நான் உங்களுடன் சில விடயங்களை பகிர்ந்துகொள்ள விரும்புகின்றேன்.

**பெற்றோர்களுக்கு :** உங்கள் பிள்ளைகள் கடவுளுக்குத் தங்களை அர்ப்பணிக்க விரும்பினால், அவர்களைத் தடுக்காதீர்கள்; மாறாக அவர்களை ஊக்குவியுங்கள். கடவுள் கைவிட்டுவிட மாட்டார், மாறாக அது முழு குடும்பத்திற்கும் ஒரு ஆசீர்வாதமாக அமையும்.



**இளைஞர்களுக்கு :** உலகின் வாக்குறுதிகளை விட மேலானது இறைவன் உங்களுக்காக ஆயத்தப்படுத்தியிருக்கும் பணி. பயமின்றி அவருடைய அழைப்பை ஏற்றுக்கொள்ளுங்கள். கிறிஸ்துவைப் பகிர்ந்துகொள்வதைவிட இவ்வுலகில் பெரிய மகிழ்ச்சி வேறில்லை.

**இறைவேண்டல் :** திருச்சபையில் உள்ள ஒவ்வொரு அழைப்பும் இறைவேண்டலுக்கான அழைப்பாகும். அதன் விளைவாக மே 31 அன்று, குருத்துவ அழைப்புகளை ஊக்குவிப்பதற்காக, அனைத்துப் ஆலயங்களிலும் திருப்பலியின் போது அல்லது அதற்குப் பின் சிறப்பு இறைவேண்டல்கள் நடத்தப்பட வேண்டும். குருத்துவ வாழ்வில் நுழைய விரும்பும் பிள்ளைகள் அன்று சிறப்பாக நினைவுகூரப்பட வேண்டும். "தமது அறுவடைக்கு தேவையான வேலையாள்களை அனுப்பும்படி அறுவடையின் உரிமையாளரிடம் மன்றாடுங்கள்" (லூக் 10:2) என்ற வார்த்தைகளின்படி இடைவிடாமல் இறைவேண்டல் செய்வோம்.

**ஆன்மீக உடனிருப்பு (Accompaniment)** : குருக்களும் துறவிகளும், குழப்பமும் தயக்கமும் உடைய இளைஞர்களின் மீது கவனம் செலுத்தி, அவர்களுக்குத் துணையாக இருந்து, சிறந்த ஆன்மீக ஆலோசனைகளை வழங்க வேண்டும்.

**தியாகம் (Sacrifice) :** இறைவனின் அழைப்பிற்காக நமது சிறிய தியாகங்களையும் நற்செயல்களையும் அர்ப்பணிப்போம்.

**இறையழைத்தல் வாரம் :** நாம் ஆண்டுதோறும் கொண்டாடும் இறையழைத்தல் வாரம் இந்த ஆண்டு மே மாதம் 25-ம் தேதி முதல் 31-ம் தேதி வரை இந்த ஆண்டு கடைபிடிக்கப்படுகிறது. ஒவ்வொரு பங்குத்தளத்திலும் இறையழைத்தல் வாரம் முறையாக அனுசரிக்கப்பட வேண்டும் என்பதை உங்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன்.

**முடிவுரை**

பிரியமானவர்களே இறைவனின் அழைப்பு ஒரு பெரும் பொறுப்பாகும். ஒருவர் தம் வாழ்வின் அர்த்தத்தை கடவுள் தமக்குக் கொடுத்த பணியை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்ளும் போது, உணர்ந்து கொள்கிறார். இந்த அழைப்பு தினத்தில் நம் ஒவ்வொருவருக்காகவும் நாம் ஜெபிப்போம். குறிப்பாக நம் இளைஞர்கள், உலகின் குரல்களுக்கு மேலாக, தங்கள் இதயங்களில் கடவுளின் குரல் மெல்ல ஒலிப்பதைக் கேட்கட்டும். “இதோ நான் ஆண்டவரின் அடிமை” (லூக் 1:38) என்ற வார்த்தைகளால் கடவுளின் திருவுளத்திற்கு பதிலளித்த மரியா, நம் ஒவ்வொருவரின் அழைப்பிலும் முன்மாதிரியாகவும் பரிந்துரைப்பவராகவும் இருக்கட்டும். அன்பான இளைஞர்களே, கிறிஸ்துவைப் பின்பற்ற அஞ்சாதீர்கள். உலகம் வழங்கக்கூடியதை விட அவருடைய சேவையில் அதிக மகிழ்ச்சியும் திருப்தியும் உள்ளது. தங்கள் பிள்ளைகளைக் கடவுளுக்கு அர்ப்பணிக்க விரும்பும் பெற்றோர்கள் ஆபிரகாமைப் போல ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்.



திருச்சபையில், குறிப்பாக சமர்ப்பண சமூகங்களில் இறையழைத்தலை ஊக்கப்படுத்த மேற்கொள்ளப்படும் அனைத்து செயல்பாடுகளின் வெற்றிக்காக மன்றாடுகிறேன். இந்த இலக்கை நோக்கி செயல்படும் திருச்சபையின் தலைவர், ஆயர்கள், குருக்கள், இருபால் துறவிகள், பொதுநிலையினர் ஆகியோரை நன்றியுடன் நினைவு கூர்ந்து வாழ்த்துகிறேன்.

ஆண்டவர் தமது இரக்கத்தையும் அருளையும் உங்கள் அனைவர் மீதும், நமது திருச்சபையின் மீதும் பொழிவாராக. மலங்கரை சுறியானி கத்தோலிக்க திருச்சபை குருத்துவ மற்றும் துறவற இறையழைத்தல்களால் வளப்படுத்தப்பட வேண்டுமென்று நாம் முழுமனதுடன் மன்றாடுவோம். பெந்தக்கோஸ்து திருநாளின் ஆசீர்வாதங்களை அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.

*இப்படிக்கு,*

**ஆண்டவரில் உங்கள் எளிய ஊழியன்**

**† மேதகு யூஹானோன் மார் அலெக்சியோஸ்**

தலைவர், இறையழைத்தலுக்கான ஆயர் மாமன்ற பணிக்குழு

# DIOCESE OF MARTHANDOM

**Very Rev. Fr. Jose Bright**
Vicar General

Bishop's House
Marthandam
K.K.District – 629 165

04 June, 2026

## வாருங்கள் மகிழ்ந்து கொண்டாடுவோம்

**பாசமிகு அருட்தந்தையர்களே, அருட்கன்னியர்களே, அருட்சகோதரர்களே, இறைமக்களே,**

மறைமாவட்ட வளர்ச்சிக்கு நீங்கள் யாவரும் அளித்துவரும் ஒத்துழைப்பிற்கு மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

அன்புமிக்கவர்களே ஒவ்வொரு வருடமும் ஜூன் திங்கள் 29-ம் நாள் அகில உலக கத்தோலிக்க திருஅவை, திருஅவையின் இருபெரும் தூண்களாகிய புனித பேதுரு புனித பவுல் ஆகியோரின் திருவிழாவை கொண்டாடுகிறது. இவர்களின் புனித வாழ்வு இன்றும் திருஅவையின் புனித வாழ்விற்கு வழி காட்டுகிறது. "இனி வாழ்பவன் நானல்ல கிறிஸ்துவே என்னில் வாழ்கிறார்" (கலா 2:20) என்ற இறைவார்த்தையை உண்மையாக வாழ்வாக்கி தன்னுடைய உயிரையே தியாகம் செய்தவர் புனித பவுல். இவர் திருஅவையின் மாபெரும் நற்செய்தி பணியாளர். கிறிஸ்து இயேசுவை அனுபவித்து கிறிஸ்து சாட்சியாக வாழ்ந்தவர். இம்மாபெரும் புனிதரை மறைமாவட்டத்தின் விண்ணக பாதுகாவலராக கொண்டிருக்கும் நாம் நமது மறைமாவட்ட தினவிழாவை கொண்டாடுகிறோம். அத்தோடு புனித பவுலின் பெயரை தன் பெயராக கொண்டிருக்கும் நமது மறைமாவட்ட ஆயர் மேதகு வின்சென்ட் மார் பவுலோஸ் அவர்களின் பெயர்கொண்ட விழாவையும் கொண்டாடுகிறோம்.



இவ்விருவிழாக்களை சிறப்பாக கொண்டாடுவது மறைமாவட்ட மக்களாகிய நம் ஒவ்வொருவரின் கடமையாகும்.

கிறிஸ்துவை ஆதாயமாக்கிக் கொள்ள தன்னை வெறுமையாக்கி அளவிட முடியாத பெருமைகளை எல்லாம் எளிமையாக்கி பயணங்கள் பல சென்று இறைசமூகங்களை உருவாக்கி திருச்சபையின் வளர்ச்சியில் வளமையும் மகிழ்வும் கண்டு இறைவனின் விழுமியங்களை வாழ்வாக்கி வாழ்ந்த புனித பவுலைப் போல நம் ஆயர் அவர்களும் தம் திருப்பணியை நிறைவேற்றி வருகிறார். மறைமாவட்ட மக்களுக்காக தன்னை முழுவதுமாக அர்ப்பணித்திருப்பவர் தானே முன்னின்று பயணங்கள் மேற்கொண்டு புதிய மறைபரப்பு பணித்தளங்களை உருவாக்க குருக்கள், அருட்சகோதரிகள், பொதுநிலையினர் என அனைவரையும் ஊக்கப்படுத்தி வருகிறார். நம் மேதகு ஆயர் அவர்களின் பெயர்கொண்ட விழா கொண்டாடும் இவ்வேளையில் ஆயர் அவர்களை வாழ்த்தவும் அவருக்காக இறைவேண்டல் செய்யவும் நாம் கடமைப்பட்டுள்ளோம்.

இவ்விழாக்களை கொண்டாடும் தருணத்தில் நமது நற்செய்தி அறிவிப்பு பணிகளை ஊக்குவிக்கவும், நாம் நற்செய்தி பணியாளர்களாக நம்மை உருவாக்கவும் முயற்சிப்போம். இவ்வருடம் மறைமாவட்ட தினவிழா கொண்டாட்டத்தில் இறைமக்கள் சமர்ப்பிக்கும் நிதி உதவியானது நமது மறைமாவட்டத்தில் எடுத்துக் கொண்டிருக்கும் புதுமுயற்சியான அணக்கரையில் அமைக்கப்படவுள்ள Care Home-ன் கட்டுமான பணிகளுக்காக பயன்படுத்தப்படும். இந்த இஹழ்ங் ஏர்ம்ங் ஆனது மருத்துவ சிகிட்சை அளிக்கப்பட்டு பிறகு வரும் தொடர் பராமரிப்பு கிடைக்கபெறாத நோயாளிகளுக்கு மருத்துவ பராமரிப்பு வழங்கப்படுதவற்காக அமைக்கப்படவுள்ளது. ஆகவே அனைவரும் சிறப்பு கவனம் செலுத்தி நிதிஉதவி அளிக்க அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

நமது பேராலயத்தில் வைத்து நடைபெற உள்ள மறைமாவட்ட தினவிழாவில் திருவனந்தபுரம் பேருயர் மறைமாவட்டத்தின் துணை ஆயர் யூஹானோன் மார் அலெக்சியோஸ் அவர்கள் பங்கேற்று சிறப்பிக்க உள்ளார்கள். இவ்விழாக்களில் அனைவரும் பங்கேற்று செபிக்க கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாண்டு மறைமாவட்ட தினவிழா மற்றும் பெயர்கொண்ட திருவிழா நிகழ்வுகள் பின்வருமாறு நடைபெறும்.

## நிகழ்வுகள்

**29 ஜூன் 2026 – திங்கட்கிழமை**

| | | |
|---|---|---|
| காலை 6.30 மணி | : | காலை மன்றாட்டு - பேராலயம் |
| காலை 6.45 மணி | : | ஆயர்களுக்கு வரவேற்பு |
| காலை 7.00 மணி | : | திருப்பலி |
| காலை 09.00 மணி | : | வாழ்த்துக்கூட்டம் |
| | : | நிதி உதவி சமர்ப்பணம் (பங்குமக்கள், நிறுவனங்கள், குடும்பங்கள், தனிநபர்கள்) |
| காலை 09.30 மணி | : | காலை உணவு |

இறைவன் உங்களை நிறைவாக ஆசீர்வதிப்பாராக.

*இயேசுவில் அன்புடன்,*

**பேரருட்தந்தை. ஜோஸ் பிரைட்**
குருகுல முதல்வர்



# குருமடச் செய்திகள்

## ❖ MBOC ஆசிரியர் பயிற்சி முகாம்

02.05.2026 அன்று குழித்துறை தாபோர் இல்லத்தில் ஆசிரியர்களுக்கான MBOC பயிற்சி முகாம் சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்வில் அருட்சகோதரர்களின் வழிகாட்டுதலுடன் ஆசிரியர்கள் உற்சாகமாகப் பங்கேற்று பயனடைந்தனர்.

## ❖ MBOC வகுப்புகள்

04.05.2026 முதல் 22.05.2026 வரை மூன்று வார காலமாக MBOC வகுப்புகள் நடைபெற்றன. அனைத்து அருட்சகோதரர்களும் தங்களுக்கு ஒப்படைக்கப்பட்ட பங்குத்தளங்களில் சிறப்பான முறையில் வகுப்புகளை நடத்தி, மாணவர்களின் ஆன்மீக மற்றும் தலைமை பண்பு உருவாக்கத்திற்கு தங்களை ஈடுபடுத்தினார்கள்.

## ❖ உயர் குருமட அருட்சகோதரர்களுக்கான முகாம்

25.05.2026 மற்றும் 26.05.2026 ஆகிய நாட்களில் உயர் குருமட அருட்சகோதரர்களுக்கான முகாம் நடைபெற்றது. இந்நிகழ்வின் ஒரு பகுதியாக அருட்சகோதரர்கள் சிறோபாயிண்ட் மறைபரப்பு தளத்திற்குச் சென்று, ஆலய வளாகத்தைத் தூய்மைப்படுத்தும் பணியில் ஈடுபட்டனர். மேலும், அப்பகுதியில் வாழும் இறைமக்களின் வீடுகளுக்குச் சென்று அவர்களைச் சந்தித்தனர். மதிய உணவிற்குப்

பின்னர் பேச்சிப்பாறை அணைக்குச் சென்று இயற்கைச் சூழலை ரசித்து மகிழ்ச்சியுடன் திரும்பினர்.

❖ **உயர் குருமடங்களுக்குத் திரும்புதல்**

31.05.2026 அன்று அனைத்து அருட்சகோதரர்களும் தங்களது விடுமுறைக் காலத்தை நிறைவு செய்து உயர்குருமடங்களுக்கு புதிய உற்சாகத்துடனும் அர்ப்பணிப்பு உணர்வுடனும் தங்களது பயிற்சி மற்றும் கல்விப் பணிகளைத் தொடர்ந்து மேற்கொள்ளும் ஆர்வத்துடன் திரும்பிச் சென்றார்கள்.

இறைவனின் அழைப்பிற்குப் பதிலளிக்கும் அருட் சகோதரர்களின் பயணம், அர்ப்பணிப்பு, சேவை மற்றும் ஆன்மீக வளர்ச்சியின் அழகிய சாட்சியாக இம்மாத நிகழ்வுகள் அமைந்தன.

## தாய்மார் சங்கம்

மார்த்தாண்டம் மறைமாவட்ட தாய்மார் சங்கத்தின் வளர்ச்சி நிதிக்காக கடந்த 17.05.2026 செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு மார்த்தாண்டத்தில் வைத்து சிறப்பு குலுக்கல் நிகழ்வானது நடைபெற்றது. இதில் பொறுப்பாளர்கள் கலந்துக்கொண்டு சிறப்பித்தார்கள்.



## மேய்ப்புப்பணி அறிவுரைக்குழு கூடுகை

மார்த்தாண்டம் மறைமாவட்ட மேய்ப்புப்பணி அறிவுரைக்குழு கூட்டம் 16.05.2006 அன்று காலை 10.00 மணிக்கு ஆயர் இல்ல அரங்கத்தில் வைத்து, மேதகு ஆயர் Dr. வின்செண்ட் மார் பவுலோஸ் ஆண்டகை அவர்கள் தலைமையில் நடைபெற்றது, மறைமாவட்ட செயலரான பேரருட்தந்தை பிராங்கிளின் ஜோஸ் அவர்கள் அனைவரையும் வாழ்த்தி வரவேற்றார்கள். செயலர் M. அருள்தாஸ் அவர்களால் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

மேய்ப்புப்பணி அறிவுரைக் குழு உறுப்பினர்களுக்கு கலந்துரையாடல் நிகழ்வின்போது மேதகு ஆயர் அவர்கள் மே மாதம் 22, 23, 24 ஆகிய தேதிகளில் குழித்துறை மார் எப்ரேம் வளாகத்தில் நடைபெறும் Bible Convension -ல் ஏராளம் இறைமக்கள் கலந்து கொண்டு தூய ஆவியின் கொடைகள் பெற வேண்டும் எனவும், பெருவிளை, புனித தேவசகாயம், சுருளோடு அடைக்கல அன்னை திருத்தலங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் எனவும், B.Sc., Nursing College தொடங்க ஆயத்த பணிகள் நடைபெற்று வருவதாகவும், தற்போதைய நிதிநிலையில் அரசின் திட்டங்களுக்கு எவ்வாறு தற்காப்பு செய்தல் (FCRA), பாதயாத்திரைகள் சம்மந்தமாக தற்போதைய சூழ்நிலைகளில் எவ்வாறு எண்ணிக்கைகள் அதிக படுத்துவது என்ற கலந்துரையாடலுடன், விளக்கி கூறினார்கள். மறைமாவட்ட முதன்மை குரு Msgr. ஜோஸ் பிறைட் அவர்கள் பேராலய கட்டுமான பணியின் தற்போதைய நிதி நிலைமை குறித்தும், மேய்ப்புப்பணி அறிவுரைக் குழு உறுப்பினர்கள் பேராலய கட்டுமான பணிகளில் ஈடுபாடு அதிகம் தேவை எனவும் குறிப்பிட்டார்கள். நன்றியுரை, இறுதி ஆசீர் ஜெபத்துடன் கூட்டம் நிறைவுபெற்றது.

# மறைபரப்பு தளச்செய்திகள்

**தேவதானப்பட்டி மறைபரப்பு தளம்**

✶ தூய தைநேசி மாதா மலங்கரை கத்தோலிக்க ஆலயத்தில் செயல்ப்பட்டு வரும் தூய அல்போன்ஸ் லிகோரி கல்வி நிலையம் நடத்தும் மாலை நேர வகுப்புகள் 08.06.2026 அன்று பங்குதந்தை ஷாஜி கிறிஸ்டோ அவர்களால் ஆசீர்வதிக்கப்பட்டு புதிய கல்வியாண்டு அதிகார பூர்வமாக தொடங்கி வைக்கப்பட்டது.

✶ மலங்கரை விவிலிய பயிற்சி முகாம் மேய் மாதம் 18, 22 தினங்களில் கிணத்துக்கடவு ஆலயத்திலிருந்து ஏழு மாணவர்களும் தேவதானப்பட்டியிலிருந்து ஏறத்தாழ 150 மாணாக்கர்களும் கலந்து கொண்டார்கள்.

✶ மேரி மக்கள் துறவற சமூகத்தின் முதன்மை தலைமை அருட்சகோதரி லிடியா அவர்களோடு இணைந்து அருட்சகோதரி ஜோவான் மரியா அவர்களும் தேவதானப்பட்டி ஆலயத்தின் மாலை நேர வகுப்பில் கலந்து கொள்ளும் மாணாக்கர்களையும் தாய்மார்களையும் சந்தித்தார்கள்.



# புனித அன்னை தெரசாள்
## மலங்கரை கத்தோலிக்க ஆலயம் அர்ச்சிப்பு, திருச்சி.

திருச்சியில், மார்த்தாண்டம் மறைமாவட்டத்தின் முதல் மலங்கரை கத்தோலிக்க ஆலயம், மேதகு ஆயர் வின்செண்ட் மார் பவுலோஸ் ஆண்டகை அவர்களால் மேய் மாதம் 9-ம் தேதி அர்ச்சிக்கப்பட்டு திருப்பலி நிறைவேற்றப்பட்டது. இதில் மறைமாவட்ட அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், இறைமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

தொடர்ந்து எல்லா ஞாயிற்றுக்கிழமைகளிலும் காலை 9:30 மணிக்கு காலை ஜெபவும், திருப்பலியும் நடைபெறும்.

நம்முடைய பங்குகளில் இருந்து வேலை, கல்வி மற்றும் பிற காரணங்களுக்காக திருச்சி பகுதியில் யாராவது இருந்தால், தயவு செய்து தெரியப்படுத்துமாறும் அன்புடன் கேட்டுக்கொள்கிறீர்கள்.

# தாபோர் தியான இல்லம்

**✶ மறைமாவட்ட நற்செய்தி பெருவிழா**

மார்த்தாண்டம் மறைமாவட்ட நற்செய்தி பெருவிழா மே மாதம் 22 முதல் 24 வரை நல்ல முறையில் நடைபெற்றது. அருட்தந்தை யூஜின் டோனி அவர்கள் வழிநடத்தினார்கள். சகோ. ஆன்றோ அவர்கள் பாடல் ஆராதனையை வழிநடத்தினார்கள். ஏராளமான மக்கள் வருகை தந்து ஆசி பெற்று சென்றார்கள்.

எல்லா சனிக்கிழமைகளிலும் தாபோர் தியான இல்லத்தில் காலை 9.30 மணி முதல் மதியம் 1.00 மணி வரை தியானம் நடைபெற்று வருகிறது. நேர்ச்சை கஞ்சியும் வழங்கப்பட்டு வருகிறது.

# மேரி மக்கள் துறவற சபை

**இதய அஞ்சலிகள்**

மேரி மக்கள் (DM) துறவற சபையில் புனித சூசையப்பர் மாகாண உறுப்பினரான அருட்சகோதரி எமரிட் டி.எம் (81) அவர்கள் 19.05.2026 அன்று இறைவனடி சேர்ந்தார்கள். அவர்கள் பாலா மறை மாவட்டம் இடமறுகு பங்கில் சீராம்குழி வீட்டில் காலம் சென்ற திரு. மாணி திருமதி அன்னம்மா தம்பதியினரின் 9-வது மகள் ஆவார்கள். இவரின் கல்லறை அடக்கம் 20.05.2026 புதன்கிழமை மதியம் 11 மணிக்கு மார்த்தாண்டம் மறைமாவட்ட ஆயர் மேதகு வின்சென்ட் மார் பவுலோஸ் ஆண்டகை அவர்களின் தலைமையில் மார்த்தாண்டம் மேரி மக்கள் மாகாண இல்ல கல்லறை தோட்டத்தில் நடைபெற்றது. அருட்சகோதரி அவர்கள் மார்த்தாண்டம் மறைமாவட்டத்திற்கு உட்பட்ட அசிசி நிலையம், செல்லங்கோணம், அணக்கரை, களியல், மாத்தார், தேமானூர், இலவுவிளை இளம் குருமடம், திருவனந்தபுரம் பட்டம் துறவற இல்லம், சாலோம் ஹோம் போன்ற இடங்களில் அருள் சகோதரியாகவும் தலைமை அருட்சகோதரியாகவும். நெல்லு மூடு, பொங்கமூடு, காஞ்சியோடு, கொடுங்குளம், அணக்கரை, தேமானூர் பள்ளிக்கூடங்களில் ஆசிரியையாகவும், தலைமை ஆசிரியையாகவும் காஞ்சியோடு களியல் போன்ற பால பவன்களின் குழந்தைகளின் ஆன்மீகத் தாயாகவும், தேமானூர், மாத்தூர்கோணம், சிறோபாயின்ட், முதலார் போன்ற மறைபரப்பு தளங்களில் மறைபரப்பாளராகவும் இருந்து செயல்பட்டார்கள். அருள் சகோதரி அவர்களின் ஆன்மா இறைவனில் இளைப்பாற ஜெபிப்போம்.






**இதய அஞ்சலிகள்**

மேரி மக்கள் (DM) துறவற சபையில் புனித சூசையப்பர் மாகாண உறுப்பினரான அருட்சகோதரி பெல்லா மேரி 86 அவர்கள் 08.05.2026 இறைவனடி சேர்ந்தார்கள். குழித்துறை மறைமாவட்டம் காஞ்சிரகோடு பங்கில் கொல்லக்குடிவிளை வீட்டில் காலம் சென்ற திரு. அன்புடையான் திருமதி. மேரி தம்பதியினரின் மூத்த மகள் இவர் கொடுங்குளம் கிராத்தூர், மெதுகும்மல், தானிப்பாடி, காஞ்சியோடு, போன்ற பள்ளிக்கூடங்களில் ஆசிரியையாகவும் தலைமை ஆசிரியை யாகவும் , அசிசி நிலையம், பாத்திமாநகர், மார்த்தாண்டம், கோயிக்கல்த்தோப்பு, தானிப்பாடி, காஞ்சியோடு, சிதறால், நடைக்காவு, விமலபுரம் போன்ற இடங்களில் மறைபரப்பு பணியாளராகவும், துறவற இல்ல தலைமை அருட்சகோதரியாகவும், மார்த்தாண்டம் விமலா பால பவன், களியல் பால பவன், மாத்தார் முதியோர் இல்லம் போன்ற இல்லங்களில் ஆதரவற்ற மக்களின் துயர் துடைக்கும் அருட் சகோதரியாகவும் செயல்பட்டார்கள்.




இவரின் கல்லறை அடக்கம் 09.05.2026 சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு பாறசாலை மறைமாவட்ட ஆயர் மேதகு எவுசேபியோஸ் ஆண்டகை அவர்களின் தலைமையில் மார்த்தாண்டம் மேரி மக்கள் மாகாண இல்ல கல்லறை தோட்டத்தில் நடைபெற்றது. அருட்சகோதரி அவர்களின் ஆன்மா இறைவனில் இளைப்பாற ஜெபிப்போம்.

# மார்த்தாண்டம் மறைமாவட்ட சமூக சேவை மையம் (மிட்ஸ்)

## வழிகாட்டுதல் பயிற்சி

தளிர்கள் உலகம் திட்டத்தின் சார்பாக 10-ம் வகுப்பு தேர்வு எழுதிய மாணவர்களுக்கான வழிகாட்டுதல் பயிற்சியானது 07.04.2026 அன்று மிட்ஸ் அலுவலகத்தில் வைத்து நடத்தப்பட்டது. மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை முனைவர் ஜெறோம் அவர்கள் பயிற்சியினை துவங்கி வைத்தார்கள். நாகர்கோவில் பெருவிளையில் இயங்கி வரும் டி.ஐ.எம். இநிறுவனத்தை நடத்தி வரும் திரு. மெர்வின் பிரசாந்த் மற்றும் திரு. பாஸ்டின் சேவியர் ஆகியோர் மாணவர்களுக்கு பயிற்சி வகுப்பை நடத்தினார்கள். உயர் கல்வி பிரிவுகள் மற்றும் அவற்றிற்கான வேலை வாய்ப்புகள் குறித்து தெளிவாக மாணவர்களுக்கு எடுத்துரைக்கப்பட்டது. மேலும் அதிக மதிப்பெண்கள் பெறவும், இலக்குகளை அடையவும் என்னென்ன முயற்சிகள் செய்யவேண்டும், எவ்வாறு படிக்கவேண்டும் என்றும் பயிற்சியளிக்கப்பட்டது. உயர் கல்வி குறித்த மாணவர்களின் சந்தேகங்கள் தீர்த்து வைக்கப்பட்டன. காலை 10 மணிமுதல் மாலை 3 மணி வரை நடைபெற்ற இந்த பயிற்சியானது மாணவர்களுக்கு மிகவும் பயனுள்ள முறையில் அமைந்ததாக கருத்து தெரிவித்திருந்தனர். இந்த பயிற்சியில் மொத்தம் 68 மாணவமாணவிகள் கலந்து கொண்டு பயன்பெற்றனர். மேலும் 02.05.2026 அன்று 9 மற்றும் 11-ம் வகுப்பு படிக்கும் மாணவமாணவியர்களுக்கு திரு. யோபிறைட் சிங் (பேராசிரியர், மார் எப்ரேம் இஞ்சினியரிங் கல்லூரி) அவர்களால் ஊக்கப்படுத்தும் பயிற்சி வழங்கப்பட்டது. இந்த பயிற்சியில் 52 மாணவமாணவிகள் கலந்துகொண்டு பயன் பெற்றனர்.

## உதவித்திட்டங்கள்

1. 15.04.2026 அன்று விருட்சம் கடன் உதவி திட்டத்தின் வழியாக நாகர்கோவில் பணிமண்டலத்தின் 5 சுய உதவி குழுக்களில் உள்ள 20 உறுப்பினர்களுக்கு ரூபாய் 15,00,000/- கடனாக வழங்கப்பட்டது.

## பிற நிகழ்வுகள்

1. 15.04.2026 அன்று விண்ணைத்தொடு திட்டத்தின் சார்பாக இயக்குநர்களின் கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்தினை CRS பணியாளர்களான அருட்தந்தை செலஸ்டின் மற்றும் செல்வி சஞ்சனா ஆகியோர் முன்னின்று நடத்தினர். விண்ணைத்தொடு திட்டத்தின் அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்து கூட்டத்தில் விவாதிக்கப் பட்டது. இந்த கூட்டத்தில் கன்னியாகுமரி மாவட்டத்தின் நான்கு மறைமாவட்டங்களின் சமூகப்பணி மைய இயக்குநர்கள் கலந்து கொண்டனர்.

2. 27.04.2026 அன்று மிட்ஸ் மண்டல அலுவலகம் புஷ்பகிரியில் வைத்து மிட்ஸ் மற்றும் Sree Ram புற்றுநோய் அறக்கட்டளை மையம் இணைந்து இலவச புற்றுநோய் பரிசோதனை முகாமை நடத்தியது. மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை முனைவர் ஜெறோம் அவர்கள் முகாமினை துவங்கி வைத்தார்கள். இந்த பரிசோதனை முகாமில் 32 நபர்கள் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

3. 29.04.2026 மற்றும் 30.04.2026 ஆகிய இரண்டு தினங்கள் விண்ணைத்தொடு திட்டத்தின் காலாண்டு ஆய்வு கூட்டம் அழகியமண்டபத்தில் உள்ள அன்னை ஆதா பயிற்சி மையத்தில் வைத்து நடைபெற்றது. இந்த கூட்டத்தில் விண்ணைத்தொடு திட்ட பயனாளிகள் அனைவரும் கலந்துகொண்டனர்.

4. 15.05.2026 அன்று தளிர்கள் உலகம் திட்டத்தின் பயனாளிகள் சுற்றுலா அழைத்து செல்லப்பட்டனர். ஆரல்வாய் மொழி காற்றாலை, புனித தேவசகாயம் பிள்ளை தேவாலயம், கன்னியாகுமரி ஆகிய பகுதிகள் மாணவ மாணவியருக்கு காண்பிக்கப்பட்டது. இந்த சுற்றுலாவில் 53 மாணவ மாணவிகள் கலந்து மகிழ்ந்தனர்.

# MCA
## Diocese of Marthandam

### பொதுநிலையினர் தினவிழா

மார்த்தாண்டம் மறைமாவட்டத்தை சார்ந்த பொதுநிலையினர் பணிக்குழு சார்பில் மரியாயின் சேனை, வின்சென்ட்-டி-பவுல், தாய்மார் சங்கம், அருள் வாழ்வியங்கள் கூட்டமைப்பு மற்றும் மலங்கரை கத்தோலிக்க இயக்கம் ஆகியவை இணைந்து 24.05.2026 அன்று பிற்பகல் 2.30 மணிக்கு மரியாகிரி மலங்கரை கத்தோலிக்க கல்லூரியில் வைத்து பொது நிலையினர் தினவிழா கொண்டாடப்பட்டது. முன்னதாக "இயேசுவின் பொதுப்பணி வாழ்வும் பொது நிலையினரும் என்ற தலைப்பில் ஒரு மணி நேரம் அருள் முனைவர். டார்பல்லோ கிறிஸ்டஸ் அவர்களால் கருத்தமர்வு நடத்தப்பட்டது. தொடர்ந்து கடந்த கூட்டத்தில் இறைவணக்கம் மரியாயின் சேனை உறுப்பினர்களும், விவிலியம் வாசித்தல் வின்சென்ட் - டி - பால் உறுப்பினரும் வரவேற்புரை - மலங்கரை கத்தோலிக்க இயக்க பொறுப்பாளரும், ஓராண்டு அறிக்கையை பொதுநிலையினர் பணிக்குழு செயலர் திரு. வர்க்கீஸ் அவர்களால் படிக்கப்பட்டது. மேதகு ஆயர் வின்சென்ட் மார் பவுலோஸ் ஆண்டகை அவர்கள் தனது தலைமையுரையில் பொதுநிலையினர் சபையோடு



செயல்பட வேண்டிய முறைகளையும், அனைத்து இயக்கங்களும் இணைந்து செயல்பட வேண்டுமெனவும் கூறினார்கள். தாய்மார் சங்கம் சார்பில் நடனமும், உண்ணாமலைகடை பங்கு சார்பில் குழுப்பாடலும், பாலவிளை பங்கு சார்பில் காமிக்கும் நடைபெற்றது. பொதுநிலையினர் பணிக்குழு இயக்குனர் பேரருட்தந்தை அர்னால்டு டயஸ் தனது அறிமுக உரையில் அனைத்து இயக்கங்களின் முக்கியத்துவம் மற்றும் இணைந்து செயல்பட வேண்டியதன் தேவை குறித்தும் பேசினார். பொதுநிலையினர் சார்பில் சாதனையாளர்களை கௌரவிக்கும் வகையில் சுருளக்கோடு பங்கை சார்ந்த திருமதி மரியசெல்வி அவர்கள் சமூக சேவகி விருது பெற்றாமைக்கும், மஞ்சத்தோப்பு பங்கை சார்த்த திருமதி ராஜம் மேரி அவர்கள் சபையளவிலான பொது நிலையினர் இயக்கத்தில் சிறப்பாக செயல்பட்டமைக்கு, பொன்னாடை போர்த்தப்பட்டு, கேடயமும் மேதகு ஆயர் அவர்களால் வழங்கப்பட்டது. விழாவிற்கான ஏற்பாடுகளை பொதுநிலையினர் பணிக்குழுவின் மேற்பார்வையால் களியக்காவிளை மறைவட்ட தலைவர் திரு. K.C. பிரைட் அவர்களது தலைமையில் சிறப்பாக செய்ப்பட்டது. கடுவாக்குழி பங்கில் திருமதி அஜிலா ஏஞ்சல் அவர்களால் அனைவருக்கும் நன்றி கூறப்பட்டது.

# பெயர்விழா நல்வாழ்த்துகள்



அருட்தந்தை
ஜெஸ்டின்
ஜூன் 01



அருட்தந்தை
ஜெஸ்டின்
ஜூன் 01



அருட்தந்தை
ரெஜின் ரெதீஷ்
ஜூன் 09



அருட்தந்தை
சுரேஷ் ஆன்றனி
ஜூன் 13



அருட்தந்தை
ஆன்றோ ஜெபின்
ஜூன் 13



அருட்தந்தை
சில்ஜின்
ஜூன் 13



அருட்தந்தை
அபிஷேக் ராஜ்
ஜூன் 13



அருட்தந்தை
ஜவின் ஆன்றோ
ஜூன் 13



அருட்தந்தை
ரெஜின் ராஜ்
ஜூன் 13



அருட்தந்தை
அஜின் அலோஷியஸ்
ஜூன் 21



அருட்தந்தை
ஜோணி ஆல்பர்ட்
ஜூன் 24



அருட்தந்தை
ஜோசப் பத்றோஸ்
ஜூன் 29



அருட்தந்தை
பிபின்
ஜூன் 29



அருட்தந்தை
பால்சன்
ஜூன் 29



# MCYM
## Youth Apostolate

✶ மலங்கரை கத்தோலிக்க இளையோர் இயக்கத்திற்கான தலைமைத்துவ பயிற்சியானது களியல் பல்லோட்டின் தியான இல்லத்தில் வைத்து நடைபெற்றது. சுமார் ஐம்பதற்கும் அதிகமான இளையோர்கள் இந்நிகழ்விலே பங்கேற்றனர். அருட்தந்தையர்களும் அருட்சகோதரர்களும் பல்வேறு துறைசார் வல்லுனர்களும் இளையோர்களுக்கு இந்த தலைமைத்துவ பயிற்சி வகுப்பை நடத்தினார்கள். குறிப்பாக Intel Cyber Crime மற்றும் சமூக வலைதளங்களில் ஏற்படுகின்ற குற்றங்கள் மற்றும் அதிலிருந்து தப்பிப்பதற்கான வழிகளை குறித்தும் எதிர்கால வாழ்க்கையில் நமக்கு இருக்க கூடிய வாய்ப்புகளை குறித்தும் அதனோடிணைத்து திருத்தந்தையின் தற்போதைய திருத்தூதுவ மடலினுடைய விளக்கவுரையையும் குறித்து மேதகு ஆயர் அவர்களுக்கும் வல்லுனர்களுக்கும் எடுத்துரைத்தார்கள்.

## திருமண ஆயத்தப்பயிற்சி

**2026 ஜூன்** மாத திருமண ஆயத்தப்பயிற்சி வகுப்புகள் 19, 20 ஆகிய நாட்களில் **குழித்துறை மேய்ப்புப் பணி நிலையத்தில்** வைத்து நடைபெறுகிறது.

# இளையோர் முகாம்

Teens Orientation முகாமானது மே திங்கள் 18-ஆம் நாளன்று வேங்கோடு பெதனி கல்வி நிறுவனங்களின் தாளாளரும் மேலதிகாரியும் ஆலோசகருமான அருட்தந்தை முனைவர் தாமஸ் ரெஜி OIC அவர்கள் மற்றும் இறைஅழைத்தல் ஊக்குவிப்பாளரும், ஆலோசகருமான அருட்தந்தை டைட்டஸ் ஜாண் OIC மற்றும் அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள் முன்னிலையில் பெதனி நிறுவனங்களின் மாகாண ஆலோசகர் அருட்தந்தை முனைவர் ஜாண் கிஸ்டோபர் OIC அவர்களால் காலை 9 மணி அளவில் பெதனி நிறுவனத்தில் வைத்து தொடங்கி வைக்கப்பட்டது.

இந்த முகாமில் பல்வேறு பங்குத்தளங்களைச் சார்ந்த 175 மாணவர்கள் மிகுந்த ஆர்வத்துடன் கலந்துகொண்டார்கள். இந்நிகழ்வில் மாணவர்களின் தனிப்பட்ட சமூக மற்றும் ஆன்மீக வளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையில் கலந்துரையாடல்கள் நிகழ்த்தப்பட்டன. மேலும் இளைஞர்கள் வாழ்க்கையில் எதிர்கொள்ளும் சவால்களை திறம்பட கையாள செயல்முறை பயிற்சிகள் கொடுக்கப்பட்டன.

மாணவர்களை உற்சாகப்படுத்தவும் அவர்களிடையே நட்புறவை ஏற்படுத்தவும் அனைவரையும் ஒத்துழைப்புடன் செயல்படவும் ஆக்கபூர்வமான மனநிலைக்கு கொண்டுவரவும் பல்வேறு நிகழ்ச்சிகள் செயல்முறை வடிவில் நடத்தப்பட்டன.



மேலும் கிறிஸ்தவ விசுவாச புரிதலை ஆளப்படுத்தவும் பல்வேறு நிகழ்ச்சிகள் ஒருங்கிணைக்கப்பட்டன. மாணவர்களின் எதிர்கால தேவைகளுக்கு பயன்படும் வகையில் வேலைவாய்ப்பு வழிகாட்டுதல்கள் கலந்துரையாடல் நிகழ்வுகள் மூலம் நடத்தப்பட்டன.

இம் முகாமின் நிறைவு விழாவில் மாகாண முதன்மை தந்தை சிருள் ஆனந்த் OIC அவர்கள் தலைமை தாங்கினார்கள். மாகாண இறைஅழைத்தல் ஒருங்கிணைப்பு பொறுப்பாளர் அருட்தந்தை டைட்டஸ் ஜாண் OIC அவர்களும், இறைஅழைத்தலை ஊக்குவிக்கும் வழிகாட்டிகளும் அருட்திரு கன்னியர்களும் விழாவில் கலந்துகொண்டு சிறப்பித்தனர். இந்த இனிய நிகழ்வானது இறை வேண்டலுடன் மாலை 4.30 மணி அளவில் இனிதே நிறைவுற்றது.

# மறைவட்ட செய்திகள்

## நாகர்கோவில் மறைவட்டம்

❖ நாகர்கோவில் மறைவட்டத்தின், கிறிஸ்துவளாகம் தூய அந்தோணியார் ஆலயத்தின் பலிபீட சீரமைப்பு பணி பூர்த்தி செய்யப்பட்டு 30.05.2026 அன்று காலை சரியாக 7.30 மணிக்கு, மார்த்தாண்டம் மறைமாவட்ட ஆயர் மேன்மை தங்கிய வின்செண்ட் மார் பவுலோஸ் ஆண்டகை அவர்களின் கரங்களினால் ஆசீர்வதிக்கப்பட்டு, நன்றி திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. இதில் மறைவட்ட குருக்கள், கன்னியர்கள் மற்றும் இறை மக்கள் பலரும் பங்கேற்று இறையாசீர் பெற்றனர்.

# ஆயரின் மே மாத நிகழ்வுகள்



- 01 ➢ உண்ணாமலைக்கடை ஆலயத்தில் திருவிழா திருப்பலியை நிறைவேற்றி புதுநன்மை வழங்கி தொழிலாளர் தினச் செய்தியை பகிர்ந்து கொண்டார்.
- 01 ➢ அடைக்காகுழி ஆலயத்தில் திருவிழா திருப்பலி நிறைவேற்றி புதுநன்மை வழங்கி ஆசீர்வதித்தார்.
- 03 ➢ பாத்திமாநகர் ஆலயத்தில் திருவிழா திருப்பலி நிறைவேற்றி இறைமக்களை ஆசீர்வதித்தார்.
- 03 ➢ கிராத்தூர் ஆலயத்தில் திருவிழா திருப்பலி நிறைவேற்றி புதுநன்மை வழங்கி இறைமக்களை ஆசீர்வதித்தார்.
- 04 ➢ இலவுவிளை மார் எப்பேரம் கல்லூரி பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்டு கௌரவித்தார்.



- 6-8 ➢ இந்திய ஆயர் பேரவை நிலைக்குழு கூட்டத்தில் கலந்து கொண்டார்.
- 09 ➢ வேளாங்கண்ணியில் வைத்து நடைபெற்ற கிறிஸ்தவ தொழிலாளர் இயக்க மாநாட்டில் கலந்து கொண்டார்.
- 09 ➢ திருச்சியில் புதிதாக அமைக்கப்பட்ட மறைபரப்பு ஆலயத்தை திறந்து வைத்து அர்ச்சித்து ஆசீர்வதித்தார்.
- 10 ➢ திருவல்லாவில் மலங்கரை கத்தோலிக்க இயக்க திருஅவை அளவிலான கூடுகையில் கலந்து கொண்டார்.
- 11 ➢ கிராத்தூரில் திருமண அருளடையாளத்தை நிறைவேற்றினார்.
- 13 ➢ மாத்தாண்டம் மேரிமக்கள் சமூகத்தை சார்ந்த அருட்சகோதரிக்கு நித்திய வார்த்தைப்பாடு திருச்சடங்கை நிறைவேற்றி ஆசீர்வதித்தார்.
- 16 ➢ மார்த்தாண்டம் மறைமாவட்ட மேய்ப்புப்பணி அறிவுரைக்குழு கூட்டத்திற்கு தலைமை தாங்கினார்.
- 16 ➢ சிதறால் ஆலயத்தில் திருவிழா திருப்பலி நிறைவேற்றி புதுநன்மை வழங்கி ஆசீர்வதித்தார்.
- 17 ➢ செருப்பாலூர் ஆலய திருத்தூயகத்தை அர்ச்சித்து திருவிழா திருப்பலி நிறைவேற்றி இறைமக்களை ஆசீர்வதித்தார்.
- 17 ➢ குமரிமாவட்ட கத்தோலிக்க மறைமாவட்டங்கள் இணைந்து நடத்திய தொழிலாளர் தின பேரணிக்கும் மாநாட்டிற்கும் தலைமை தாங்கினார்.
- 18 ➢ தொலையாவட்டத்தில் திருமண அருளடையாளத்தை நிறைவேற்றினார்.

18-19 ➢ பெங்களூரில் வைத்து நடைபெற்ற தொழிலாளர் நலப்பணிக்குழு கூட்டத்திற்கு தலைமை தாங்கினார்.

20-21 ➢ திருச்சி அருங்கொடை இல்லத்தில் நற்செய்திப் பகிர்வை வழங்கி ஆசீர்வதித்தார்.

22 ➢ மார்த்தாண்டம் மறைமாவட்ட நற்செய்தி பெருவிழாவினை துவங்கி வைத்தார்.

24 ➢ பின்குளம் ஆலயத்தில் பெந்தெக்கோஸ்து பெருவிழாவின் திருச்சடங்குகளை நிறைவேற்றி திருவிழா திருப்பலியும் ஒப்புக் கொடுத்தார்.

24 ➢ பொதுநிலையினர் தின கொண்டாட்டத்தில் கலந்து கொண்டு ஆசீர்வதித்தார்.

25 ➢ வெட்டுக்குழியில் திருமண அருளடையாளத்தை நிறைவேற்றினார்.

28 ➢ MCYM இளைஞர்கள் தலைமைத்துவ பயிற்சியில் கலந்துகொண்டு ஆசீர்வதித்தார்.

29 ➢ நாலாஞ்சிறை மலங்கரை உயர் குருமடத்தில் முதலாம் ஆண்டு அருட்சகோதரர்களுக்கு அறிமுகப் பயிற்சியை வழங்கினார்.

31 ➢ குழித்துறை ஆலயத்தில் திருவிழா திருப்பலி நிறைவேற்றி புதுநன்மை வழங்கி ஆசீர்வதித்தார்.

31 ➢ முதலார் ஆலயத்தில் திருவிழா திருப்பலி நிறைவேற்றி இறைமக்களை ஆசீர்வதித்தார்.




# இம்மாதம் நினைவு கூர


ஜூன் 2026

1 – புனித ஜஸ்டின்
4 – கீவற்கீஸ் மார் திமோத்தியோஸ் ஆண்டகையின் நினைவு (2019)
5 – புனித போனிபஸ்
7 – பெந்தக்கோஸ்துக்குப்பின் இரண்டாம் ஞாயிறு
8 – புனித மரிய தெரசாள்
11 – மார் பர்த்தலமேயு மற்றும் மார் பர்ணபாஸ்
மலங்கரை கத்தோலிக்க திரு ஆட்சி பீடம் நிறுவப்பட்ட நாள் (1932)
திருவனந்தபுரம் மறைமாநிலம் மற்றும்
திருவல்லா மறைமாவட்டம் உதயம் (1932)
12 – திருஇருதய திருநாள் (இலத்தீன்முறை)
13 – பதுவை நகரின் புனித அந்தோணியார்
14 – பெந்தக்கோஸ்துக்குப்பின் மூன்றாம் ஞாயிறு
இறைவாக்கினர் எலிசா
15 – தூய இறைஅன்னையின் பெயரில் முதல் தேவாலயம்
நிறுவியதன் நினைவு
16 – திருத்தூதர் நோன்பு (பதிமூன்று நோன்பு தொடக்கம்)
18 – மார் எஃப்ரேம் மல்பான்
19 – திருத்தூதர் புனித யூதா ததேயு
21 – பெந்தக்கோஸ்துக்குப்பின் நான்காம் ஞாயிறு
புனித அலோஷியஸ் கொன்சாகோ
24 – ஸ்நாபக யோவானின் பிறப்பு
சேப்பாட்டு பிலிப்போஸ் ரம்பானின் நினைவு
27 – யாக்கோபு மார் தியோஃபிலோஸ் ஆண்டகையின் நினைவு (1956)
28 – பெந்தக்கோஸ்துக்குப்பின் ஐந்தாம் ஞாயிறு
குருமட தினம்
புனித ஐரேனியூஸ், சாமுவேல் மார் ஐரேனியூஸ்
ஆண்டகையின் பெயர்விழா
29 – திருத்தூதர்களான மார் பேதுரு, மார் பவுல்
திருத்தூதர் நோன்பு நிறைவு
தூய மரியன்னை மலங்கரை குருத்துவக் கல்லூரி நிறுவப்பட்ட நாள் (1989)
யூஹானோன் மார் கிறிஸோஸ்டோம் மற்றும் யோசுவா மார்
இக்னாத்தியோஸ் ஆண்டகையரின் ஆயர் திருநிலைப்பாடு (1998)
வின்சென்ட் மார் பவுலோஸ் ஆண்டகையின் பெயர்விழா
30 – பன்னிரு திருத்தூதர்கள்

13


19


21


24


29


## புனித அன்னை தெரசாள் ஆலயம் அர்ச்சிப்பு, திருச்சி



## மறைமாவட்ட நற்செய்திப் பெருவிழா



## மறைபரப்பு தளச் செய்திகள்





## மேய்ப்புப்பணி அறிவுரைக்குழு கூடுகை



## MIDS



## MCA




## MCYM



## இளையோர் முகாம்



## மறைவட்ட செய்திகள்

